**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 28 of 2021

Depositions of DW - 1 witness for ________ Prosecution / Defence / Court

Name : ரவி
Father's Name : த/பெ. பொன்னுசாமி
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of November 2022.

முதல் விசாரணை –

1. நான் இந்த வழக்கில் எதிரியாவேன். மனுதாரரை எனக்கோ அல்லது என்னுடைய குடும்பத்தினருக்கோ யார் என்று தெரியாது. மனுதாரரிடம் நான் எப்பொழுதும் பணம் எதுவும் பெற்றதில்லை. அவரிடமிருந்து பணம் பெறுவதற்கான அவசியம் இருந்ததில்லை. 80 வயதான என்னுடைய மாமானாருககு சர்க்கரை நோய் மற்றும் ரத்த அழுத்த நோய் உள்ளது. அவருக்கு தேவைப்படும் பொழுது நான் தான் கோயமுத்தூருக்கு சிகிச்சைக்காக அழைத்து வருவேன்.

2. நான் மனுதாரரிடம் இருந்து பணம் பெற்றதாக கூறப்பட்டும் 04.09.2020 ம் தேதியன்று என்னுடைய மாமனார் நோய் வாய்பட்டு கேஜி மருத்துவனையில் உள்நோயாளியாக சிகிச்சை சேர்க்கப்பட்டிருந்தார். அந்த சமயத்தில் கொரோனா காலம் என்பதால் நானும் என்னுடைய மாமானார் வீட்டிற்கு செல்லவில்லை. அவரும் எங்களுடைய வீட்டிற்கு வரவில்லை. அந்த சமயத்தில் என்னுடைய மாமனாருக்கு காலில் ஏற்பட்ட புண் ஆனது அவருககு சர்க்கரை நோயின் காரணமாக பெரியதாகி விட்டது. கொரோனா காலம் என்பதால் அவர் சரியாக அப்புண்ணிற்கு சிகிச்சை எடுக்காமல் விட்டுவிட்டார்.

3. 03.09.2020 ம் தேதியன்று மாலை அவருடைய உடல் நிலை கவலைக்கிடமாகி விட்டதால் அவரை நான் அழைத்து வந்து பிஎஸ்ஜி மருத்துவனையில் அவசர சிகிச்சை பிரிவில் சேர்த்தேன். ஆனால் மருத்துவர்கள் கொரோனா காலம் என்பதால் கொரோனா பரிசோதனை செய்து அதனுடைய முடிவு தெரிந்த பின்னர் தான் சிகிச்சைக்கு எடுத்துகொள்வோம் என்றும் அது வரை அவரை கொரோனா வாடில் சேர்த்துகொள்வதாக கூறினார்கள். ஆனால் நாங்கள் பயந்து கொண்டு கொரோனா வந்துவிடும் என பயந்து அவரை வீட்டிற்கு அழைத்து வந்து விட்டோம்.

4. மறுநாள் காலை அவருக்கு காய்ச்சல் வந்து விட்டது மேலும் அவருக்கு ஆக்சிஜன் அளவு குறைந்து விட்டதால் உடனடியா கொரோனா சிகிச்சை பெறவேண்டும் என்று பிஎஸ்ஜி மருத்துவனையில் தெரிவித்ததார்கள். மேலும அவர்களுடைய மருததுவமனையில் அன்றைய தினம் போதுமான இடவசதி இல்லை என்றும் எனவே வேறு மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு கூறினார்கள். ராயர் கேர் மற்றும் கேஎன்சி மருத்துவமனைகளில் சேர்க்க முயற்சி செய்தோம். பின்னர் 4 மணியளவில் கோவை கேஜி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம்.

5. அம்மருத்துவமனையில் என்னுடைய மாமானாரை பரிசோதித்து விட்டு அவருக்கு கொரோனா பாதிப்பு இல்லை என்று தெரிந்தவுடன் அவரை உள்நோயாளியாக அனுமதித்து விட்டார்கள். 04.09.2020 லிருநது 11.09.2020 ம் தேதிவரை மருததுவமனயில் அவருடன் இருந்து நான் தான் அவரை பார்த்து கொண்டேன். **(பிஎஸ்ஜி மருத்துவமனைக்கான ரசீதுகள் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கேஜி மருத்துவமனையில் வழங்கப்பட்ட மருத்துவ குறிப்புகள் மற்றும் ரசீதுகள் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**6.** வழக்கு காசோலையானது சுமார் 10 வருடக்ஙளகுக்கு முனனர் நான் வங்கியிலிருந்து பெற்ற ஒரு காசோலை புத்தக்கத்திற்குரிய காசோலை ஆகும். 19.11.2020 ம் தேதியன்று தான் என்னுடைய வங்கியிலிருந்து என்னுடைய கைப்பேசிக்கு ஒரு குறுஞ்செய்தி வந்தது. அதற்கு பின்னர் என்னுடைய காசோலையானது காணாமல் போய்விட்ட விபரமும் அக்காசோலை யாரோ ஒரு தெரியாத நபரல் வங்கியில் வசூலுக்குதாக்கல் செய்யப்பட்ட விபரமும் தெரியவந்தது. உடனே நான் இணைய வழியாக அக்காசோலையை நிறுத்தி வைக்குமாறு என்னுடைய வங்கிக்கு தகவல் கொடுத்தேன்.

7. 19.11.2020 ல் என்னுடைய வங்கி கணக்கில் ரூ.11,11,696/- இருப்பு இருந்தது. **(என்னுடைய வங்கி கணக்கு பட்டியில் எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேலும் என்னுடைய மாமானாருக்கு பிஎஸ் மற்றும் கேஜி மருத்துவமனைக்கான மருத்துவ செலவினை நான் தான் செலுத்தினேன். அவ்வாறு கிரிடிட் காட் மூலமாக நான் பணம் செலுத்தியதற்கான **(என்னுடைய வங்கி கணக்கு பட்டியல் எ.ம.சா.ஆ.4 மற்றும் எ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

8. நான் எங்களுடைய குடும்பத்திற்கு பார்த்தியப்பட்ட வேலன் இன்போஸ் சர்வீசஸ்

என்ற நிறுவனத்தில் முதன்மை செயல் அதிகாரி(சிஇஓ) ஆக பணியாற்றுகிறேன். கடந்த 3 வருடங்களில் என்னுடைய வருமானம் ரூ.1 கோடியே 30 லட்சம் ஆகும். நான் வருமான வரி மட்டும் 35 லட்சம் வரை செலுத்தியுள்னே. **(2020-2021, 2021-2022 , 2022-2023 க்கான வருமானவரி கணக்கு பட்டியல் எ.ம.சா.ஆ.6, எ.ம.சா.ஆ.7 மற்றும் எ.ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

9. எனக்கு போதிய அளவு வருமானம் உள்ள நிலையில் மனுதாரரிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. நான் மனுதாரருககு அனுப்பிய **(16.12.2020 ம் தேதியிட்ட பதில் அறிவிப்பு எ.ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.(ஏற்கனவே பதில் அறிவிப்பு ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது).** எனக்கு எதிராக பொய்யாக தாக்கல செய்யப்பட்டுள்ள இவ்வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>குறுக்குவிசாரணை</u>

மனுதாரர் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2022.11.24 18:30:30 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**